பட்டுக்கோட்டை அரசினர் பொது மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவு.

234—(*வினா எண் 3894) திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை அரசினர் பொது மருத்துவமனையில் (Intensive Coronary Care Unit) தீவிர சிகிச்சை பிரிவு ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையை சுற்றியுள்ள பேராவூரணி, முத்துப்பேட்டை, திருவோணம் ஆகிய ஊர்களிலுள்ள மக்கள் ஹார்ட் அட்டாக் போன்ற நோய்களுக்கு சிகிச்சை பெற வேண்டுமானால் உடனடியாக 80 கிலோ மீட்டர் தூரமுள்ள தஞ்சை மாவட்ட மருத்துவமனைக்குச் செல்லவேண்டிய நிலைமை இருக்கிறது. இதய நோய்க்காரர்களைப் பொறுத்தவரையில் அந்த நோய் கண்ட உடன் காரிலோ வேனிலோ இவ்வளவு தொலைவுக்கு அவர்களை அழைத்துச் செல்வது அந்த நோயாளிகளுக்கு உகந்ததல்ல. உடனடியாக மரணம் சம்பவித்து விடுகிறது. ஆகவே, பட்டுக்கோட்டையை மையமாகக் கொண்டு, பேராவூரணி, முத்துப்பேட்டை, திருவோணம், ஒரத்தநாடு ஆகிய பகுதி மக்கள் சிகிச்சை பெறுகின்ற வகையில் வருகின்ற நிதியாண்டிலேயாவது அரசு தகுந்த நடவடிக்கை எடுத்து ஒரு இன்டென்சிவ் கேர் யூனிட்டை ஆரம்பிக்க உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–20)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரத்திலே இருக்கின்ற மருத்துவமனைகளிலே முதலிலே துவக்க வேண்டுமென்று முடிவெடுத்து இப்பொழுது காமராஜர் மாவட்டத்தில் விருதுநகரிலும், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தின் தலைநகரான சிவகங்கையிலும் துவக்கவிருக்கிறோம். அது முடிந்ததற்குப் பிறகு தான் தாலுக்காவில் இருக்கின்ற மருத்துவமனைகளுக்கு வர வேண்டும். முதலிலே மாவட்ட மருத்துவமனைகளுக்கெல்லாம் செய்து முடிக்க வேண்டும். இரண்டு மாவட்ட மருத்துவமனைகளுக்குச் செய்து முடித்தபிறகு இவை பரிசீலிக்கப்படும்.

1987 ஏப்ரல் 1]

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர அவர்களே, இந்த இன்டென்சிவ் கேர் யூனிட் ஆரம்பிப்பதற்கு என்ன வரைமுறைகளை நிர்ணயித்திருக்கிறார்கள் ? அப்படி மாவட்ட மருத்துவமனைகளிலே மட்டும்தான் இவற்றை ஆரம்பிக்க இயலுமா ? தாலுக்கா மருத்துவமனைகளிலே இந்த வசதி வருவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ? ஏனென்றால் கிராமப் பகுதி மக்கள் இப்படிப்பட்ட நோய்களால் தாக்கப்படுகின்றபொழுது அந்த மக்களுக்கு சிகிச்சை எளிதாகக் கிடைப்பதற்கு கிராம மக்கள் மீது அக்கறை கொண்டுள்ள தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவரின் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் இந்தச் சிகிச்சையை ஏற்பாடு செய்து முடித்த பிறகுதான் தாலுக்கா மருத்துவமனைகளுக்கு வர வேண்டும். இதற்காகத் தனியாக விதிகள் ஒன்றும் கிடையாது. மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் முடித்ததற்குப் பிறகு, தாலுக்கா மருத்துவமனைகளுக்கு வரலாம் என்றுதான் அரசு உத்தேசித்திருக்கிறது. தடங்கலாக இருப்பது நிதி ஆதாரமே தவிர வேறு எதுவுமில்லை.

துறையூர் அரசு மருத்துவமனையில் படுக்கைகளை அதிகரித்தல்.

235—(*வினா எண் 7005) திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் அரசு மருத்துவமனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் அவர்களே, (அ & ஆ) தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் அரசு மருத்துவமனை மிகவும் பின்தங்கிய நிலைமையிலே இருக்கிறது. அங்கே நவீன அறுவை சிகிச்சை அரங்குக்கும், அதற்கடுத்தாற்போல நீரிழிவு போன்ற நோய்களை ஆராய்ச்சி செய்வதற்கு நவீன இயந்திரங்களை அங்கே பயன்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதே அங்கே ஒரு அறுவை சிகிச்சை அரங்கு இருக்கிறது. சிறிய அறுவை சிகிச்சைகள் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 350 நடைபெற்று வருகின்றன. இதை விரிவுபடுத்துகின்ற யோசனை தற்போது இல்லை.